முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1044

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.08.2022, திங்கட்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த அரங்கா வாழ்க
பிரணவப்பிரியன் என் அவதாரமே வாழ்க வாழ்க
சரவணச்சுடர் ஏற்றி கலியுகத்தை
சற்குருவாய் வழி நடத்தும் அரங்கனே வாழ்க வாழ்க
2. வாழ்க என சுப்ரமணியப்பெருமான் யானும்
வாழ்த்தியே அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
வழங்கிடுவேன் சுபகிருது நள்ளி திங்கள்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 23 நாள், 08.08.2022 திங்கட்கிழமை)
வல்லமைபட அரங்கன் அவதாரமே இந்த கலியுகத்தை
3. கலியுகத்தை ஞான வழி நடத்தி
பேரழிவிலிருந்து வழங்கிடுவேன் பாதுகாப்புத் தந்து
மேன்மைபட ஞானவான்களாக மக்களை தேற்றி
மண்ணுலகை பாதுகாப்புமிக்க ஞான ஆட்சிக்காலமாக
4. ஆகவே மாற்றி அருள் புரியும்
அளவிலா அரங்கன் உபதேசமும் தர்மமும்
மாற்றம் செய்து மக்களிடை தயவை பெருக்கி
மாண்புடன் மக்களெல்லாம் ஞானவான்களாக சிறக்க
5. சிறக்கவே உயர் வழி காட்டும்
சிந்தை தெளிவிற்கும் ஆற்றல்பட உலகை மாற்ற
உண்டான அற்புதத்துக்கும்
அரங்கன் சேவையே நல்வழிவகுக்கும்
6. ஆகவே அரங்கனுள் யானிருந்து இந்த மாற்றத்தை கருணைகொண்டு
அகிலத்தை நோக்கி இயக்குகின்றேன்
அன்னதனால் கலியுகத்தார் அரங்கன் குடில் நோக்கி
அவசியம் வந்து தொடர்ந்து தொண்டர்களாகி
7. ஆகியே உயர் சேவையாற்ற
அகிலத்தில் சடுதி மாற்றம் நிகழும்
ஞான ஆட்சிக் காலமாக
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–